# விடியல் The Dawn

மாத இதழ்

பொழுது - 35

மார்ச் 2012


# உலக மகளிர் தினச் சிறப்பிதழ்



தமிழ்நதி



காஞ்சனா தாமோதரன்





அம்பை



ராஜம் கிருஷ்ணன்

விடியல்

The Dawn

மாத இதழ், பொழுது – 35
மார்ச், 2012

*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
vidiyalmagazhine@gmail.com
www.ksrcasthamizh.blogspot.com
www.ksrcas.edu

# உள்ளடக்கம்

## கட்டுரைகள்

*பெண்கல்வி* 02,
*கல்வியால் பெண்கள் உயர்வர்* 04,
*அன்னை தெரேசா* 05,
*அன்னி பெசண்ட் அம்மையார்* 06,
*வேலுநாச்சியார்* 10,
**Helen Thayer** 13,
*காஞ்சனா தாமோதரன்* 15,
*தமிழ்நதி, அம்பை* 17,

## கவிதைகள்

*தாய்,பெண்மை, வாழ்த்துகள்* 03,
*தாயைப் பார்* 05,
*தூய அன்பு* 09,
*பெண்* 14,

## துளிச்செய்திகள்

*இந்தியாவின் முதல்பெண்* 05,
*அமெர்த்தியா சென்* 14

## சரித்திரக் கட்டுரை - 03

*கங்கைகொண்ட சோழபுரம்* 19

## சங்கச் சாரல் - 01

*இன்பமும் துன்பமும்* 11

## மாதம் ஒரு படைப்பாளர்

*ராஜம் கிருஷ்ணன்* 15

## கடிதங்கள் 24

▼

# பெண் கல்வி

*சு. திவ்யா,*
முதலாண்டு ஆங்கிலம்

***முன்னுரை***

***'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது'*** என்று மானிட பிறவியைப் போற்றிப் பாடியுள்ளார் ஔவையார். இத்தகைய பிறவியிலும் மங்கயராய்ப் பிறத்தல் சிறப்பு என்பதை 'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று கவிமணி பாடியுள்ளார். இத்தகைய சிறப்பு மிக்க பெண்மைக்கு அழியாச் செல்வமாகிய கல்வியை அளித்தல் அவசியம். இது குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

***கல்வியின் சிறப்பு***

***'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'*** மனிதனின் வாழ்வில் கண்களின் அவசியம் எவ்வளவோ, அதே அளவு கல்வியும் அவசியமானதாகும். கல்வி கற்றவர்களால் மட்டுமே அறியாமையை ஒழிக்க முடியும். ஆதலால், கல்வி கற்றல் மிகவும் முக்கியமானதாகும். வாழ்க்கை என்ற படகில் பயணம் செய்யும் நாம், திசைமாறிப்போகாமல் சரியான இடத்தை அடைய உதவும் கலங்கரைவிளக்கைப் போன்றது கல்வி. இது என்றைக்கும் உயர்ந்து நின்று அனைவருக்கும் வழிகாட்டும். சரியான முறையில் கல்வியைக் கற்றால்தான் துன்பம் என்னும் உலகியல் புயலை எதிர்கொள்ள முடியும்.

***அன்றைய கல்வி முறை***

இக்காலத்தைப் போன்று கல்வி கற்கும் பழக்கம் அக்காலத்தில் இல்லை. அக்கால மக்கள் பள்ளிகள், புத்தகங்கள் ஆகிய வற்றைப் பயன்படுத்தவில்லை. அவர்களுக்குப் பள்ளி என்றால் குருகுலம் மட்டுமே. அதில் அவர்கள் இயன்றவரை கல்வி கற்றனர். தாள், பேனா போன்ற எழுதுபொருட்கள் இல்லை. மண்ணோடுகள், ஓலைச் சுவடிகள் முதலியவற்றில் பதிந்து வைத்துக் கற்றனர். அவர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலியவற்றைக் கற்கவில்லை. முழுமையான அனுபவக் கல்வியை மட்டுமே அறிந்தனர். அவர்களின் அடிப் படைத் தொழில் விவசாயம். தங்கள் நிலங்களில் வேலை செய்யத் தங்கள் குழந்தை களையும் அழைத்துச்சென்றனர். அக்குழந்தைகள் கல்வி கற்க வில்லை.

***பெண்களின் நிலை***

***'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'*** என்ற எண்ணமே அக்காலப் பெண்களின் கல்வி யைக் கட்டுப்படுத்தியது. அக் காலத்தில் ஆணாதிக்கம் தலை தூக்கியிருந்தது. அதனால், பெண் கள் பிறந்தது முதல் பெற் றோரிடமும் திருமணத்திற்குப் பின் கணவரிடமும் அடிமைப்பட்டு இருந்தனர். பெண்கள் என்றால்

அவர்கள் சமைப்பதற்கும் கணவரையும் குழந் தையையும் பேணுவதற்கும் பயன் படுபவர்கள் என்ற எண்ணம் வேரூன்றி யிருந்தது. ஆதலால், பாரதியார் முதலான கவிஞர்கள், சமூகச் சிந்தனையாளர்கள் பெண்ணடிமைத் தனத்தை ஒழிக்கப் பாடுபட்டனர். அதன்விளைவாகப் பெண்ணடிமை சற்று ஒழிந்தது. பெண்கல்வி வளர்ந்தது.

***இக்காலப் பெண்களின் நிலை***

இன்றையக் கல்விப் பாடத்திட்டங்கள் விவசாயம் முதல் விஞ்ஞானம் வரை கற்றுக்கொள்ளும் வகையில் வகுக்கப் பட்டுள்ளன. பெண்ணடிமைத்தனம் மாறி, அனைத்து இடங்களிலும் கல்விகற்ற பெண்கள் பணிபுரிகின்றனர்.

***முடிவுரை***

***"நல்லவை ஆவதும் பெண்ணாலே!***
***தீயவை அழிவதும் பெண்ணாலே!!"***

என்ற புதுவிதியை மனத்துள் பதித்துப் பெண்களுக்குக் கல்வி என்னும் விளக்கைக் கொடுத்து அறியாமை என்ற இருளை நீக்குவோம்.

## வாழ்த்துகள்

*"நேற்றைய நினைவுகள்*
*இனிமையாக,*
*இன்றைய நினைவுகள்*
*அனுபவங்களாக,*
*நாளைய கனவுகள்*
*நிஜங்களாகப்*
*பெண்ணே! உன்னை வாழ்த்துகிறேன்"*

**க. பிரதாப்,** முதலாண்டு வேதியியல்துறை

## தாய்

*"ஒன்றுமே தெரியாத இவ்வுலகிலே*
*நானும் ஒரு ஜீவன் என்று*
*ஒளிவீச வைத்த தெய்வம் தாய்.*

*தனக்காக மட்டுமின்றித் தன்னைப்*
*பிறருக்காகவும் அர்ப்பணிக்கும்*
*இனிய இதயம் தாய்.*

*பத்து மாதம் கருவறையிலும்*
*பல வருடங்கள் கனவறையிலும்*
*பல நாட்கள் விரதத்திலும்*
*வாழ்ந்தபோதும் வீட்டிற்கு வரும்*
*விருந்தினரை இன்முகமாய்ப்*
*பேணுபவள் தாய்.*

*என்றும் தலைமையானவள்*
*என்றும் முதன்மையானவள்"*

**ஜெ. இந்துமதி**
இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம்

## பெண்மை

*"கருணையின் கருவறை-*
*பாசத்தின் பிறப்பிடம்-*
*மனவுறுதியின் மறுஉருவம்-*
*மென்மையின் மேன்மை-*
*உண்மையின் உறைவிடம்-*
*நாணத்தின் நிறைவிடம்-*
*அறிவின் அரிய சிகரம்-*
*பெண்மை!பெண்மை!! பெண்மை!!!"*

**சு.தீபா,**
முதலாண்டு ஆங்கிலம்

# கல்வியால் பெண்கள் உயர்வர்

***கே. லலிதாம்பாள்,***
முதலாண்டு நுண்ணுயிரியல் துறை

***முன்னுரை***

***'ஓர் ஆண் கல்வி கற்றால் அந்த ஆண் மட்டுமே பயனடைவான். ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே பயனடையும்'*** என்றார் பாரதிதாசன். எனவே, பெண்கல்வி மிக அவசியம். அது குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

***சங்க காலப் பெண்கள்***

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் முதலான பெண்பாற் புலவர்கள் இன்றும் போற்றப் படுவதற்குக் காரணம் அவர்களின் புலமைத்தன்மையே ஆகும். அக் காலத்தில் புலமைத்திறம்பெறுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது வானதாகவே இருந்தது. பிற்காலத்தில் தான் அது ஆண்களுக்கு மட்டுமே யானதாக வலியுறுத்தப்பட்டது.

***புதுமைப் பெண்கள்***

இன்றைய நவீனக் காலப் பெண்கள் ஆணுக்கு நிகராகக் கல்விபெற்று வருகின்றனர். 'ஏட்டை யும் பெண்கள் தொடுவது தீமை என்றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்' என்றும் 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்' என்றும் பாரதியார் கூறியவை இன்று நடைமுறைக்கு வந்து விட்டன.

***சாதனைப் பெண்கள்***

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இந்தியாவின் முதல் பெண் மருத்துவராகத் திகழ்ந்தார்.

முன்னாள் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி இந்தியாவின் முதல் பெண் பிரதமராக விளங்கினார்.

கல்பனா சாவ்லா விண் வெளிக்குச் சென்று சாதனை படைத்தார்.

காவல்துறையில் பல சாதனை கள் புரிந்த கிரண்பேடி இந்திய வின் முதல் ஐ.பி.எஸ். ஆதிகாரி யாவார்.

சேவைக்காக நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசா யாரும் மறக்கமுடியாத பெண்மணியாவார். இவர்களால் சாதிக்க முடிந்த மைக்குக் காரணம் அவர்கள் பெற்ற கல்வியேயாகும்.

***முடிவுரை***

ஆகவே, பெண்கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து அவர்களுக்குத் தொடர்ந்து கல்வி யளிப்போம்.

***பின் அட்டை ஓவியம்***

**எஸ். கோகுலப்பிரியா**
**முதலாண்டு இயற்பியல் துறை**

## முதல்பெண்

***'இந்தியாவின் முதல் பெண்'***

அரசி - ரசியா சுல்தானா
ஜனாதிபதி – பிரதீபா பாட்டீல்
பிரதமர் - இந்திராகாந்தி
கவர்னர் - சரோஜினி நாயுடு
முதல்வர் - சுசேதா கிருபாளினி
மத்திய அமைச்சர் - அன்னாசாண்ம
சிகரம் ஏறியவர் - பச்சேந்திரிபால்
ஐ.ஏ.எஸ். அதிகாரி – அன்னா ஜார்ஜ் மல்ஹோத்ரா
ஐ.பி.எஸ். அதிகாரி – கிரண்பேடி
டி.ஜி.பி. – காஞ்சன் பட்டாச்சார்யா.

**டி. தீபிகா,**
முதலாண்டு வேதியியல்

## தாயைப் பார்

"பகவத்கீதை, திருக்குர்ஆன், திருமறை
மூன்றையும் வாழ்க்கை முறையாக்கி,
ரிக், யஜுர், சாம, அதர்வனம்
நான்கையும் நாளும் கடைப்பிடித்து,
அன்பு பரிவு விட்டுக்கொடுத்தல்
மூன்றையும் கடவுளின் கட்டளையாக்கி,
புத்தரின் இரக்கத்தை இதழ்களாக்கி
உருவான ஓர் உருவம் உன் தாய்.
உன் தாயைப் பார்
உன் இதயம் தூய்மையாகும்."

**டி. காயத்ரி,** இரண்டாமாண்டு துகிலியல் மற்றும் ஆடைவடிவமைப்புத்துறை.

## அன்னை தெரேசா

அன்னை தெரேசா (ஆகஸ்டு 26, 1910 - செப்டம்பர் 5, 1997), அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்தியக் குடியுரிமை பெற்ற ரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார்.

இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ ஆகும். 1950 ஆம் ஆண்டு, இந்தியாவின் கல்கத்தா மிஷினரீஸ் ஆப் சேரிட்டி என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக அவர் ஏழை, எளியோர்களுக்கும், நோய் வாய்ப்பட்டோருக்கும், அனாதைகளுக்கும், இறக்கும் நிலையிலிருப்போருக்கும் தொண்டாற்றிக் கொண்டே, முதலில் இந்தியா முழுவதும் பின்னர் ஏனைய வெளிநாடுகளுக்கும் மிஷினரீஸ் ஆப் சேரிட்டி-யைப் பரவலாக்கினார்.

1970 ஆம் ஆண்டுகளுக்குள் இவர் சிறந்த பரோபகாரி எனவும் ஏழைகளுக்கும், ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட மேல்கம் முக்கெரிட்ஜ்-ன் சம்திங்க் பியுடி∴புல் ∴பார் காட் என்ற விளக்கப்படமும் ஒரு காரணமாகும்.

இவர் 1979 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசும்,

1980 ஆம் ஆண்டில் மனிதநேய பணிகளுக் காக இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னாவும் பெற்றார்.

அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை விரிந்து கொண்டே சென்று, அவரது மரணத்தின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்கள் இயக்கிக் கொண்டிருந்தன.

இதில் எச்ஐவி/எய்ட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக் கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள் மற்றும் இல்லங்கள், இலவச உணவு வழங்கு மிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்தி னருக்கான ஆலோசனைத் திட்டங் கள், அனாதை இல்லங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களும் அடங்கும்.



இவரது மரணத்திற்குப் பின் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந் தவராக அறிவிக்கப்பட்டு கொல் கத்தாவின் ***'அருளாளர் தெரேசா'*** என்று பட்டம் சூட்டப்பட்டார்.

-எஸ். சுகன்யா,
முதலாண்டு நுண்ணுயிரியல்துறை

## அன்னி பெசண்ட் அம்மையார்



ஐரியக் குடும்பத்தில் லண்டனில் 1847 ஆம் ஆண்டில் பிறந்தவர் அன்னி வூட். தந்தை வில்லியம் பைஜ்வூட் அயர்லாந்தில் பிறந்து லண்டனில் குடியேறியவர்.

அன்னி ஐந்து வயதாக இருக்கும்போது தந்தையை இழந்தார். அன்னை ஹரோ நகரில் ஆண்கள் பாடசாலை ஒன்றை நடத்தி வந்தார். அன்னி தன் 19ஆவது வயதில் 1867 ஆம் ஆண்டில் பிராங்க் பெசண்ட் என்ற 26 வயது மத குருவை மணந்தார்.

டிக்பி, மேபேல் என்ற இரண்டு பெண் குழந்தைகளைப் பெற் றெடுத்தார். கணவருடன் இணைந்து வாழ்வது அன்னிக்கு மிகவும் துன்பமாக இருந்தது. பெண்ணுக்கு ஏற்பட்ட நோயினால் மனமுடைந்து போன அன்னி நாத்திகரானார்.

கணவர் பெசண்ட், மனை வியைக் கோயிலுக்குச் செல்லும் படியும், கிறிஸ்தவ மதக் கொள்கைக்கு ஏற்ப நடக்கும்

படியும் வற்புறுத்தினார். சுதந்திர மனப்போக்குக் கொண்ட அன்னி கணவரிடம் இருந்து 1873 இல் பிரிந்து வாழ முடிவெடுத்தார்.

1880களில் அன்னி பெசண்ட் கணவரிடம் இருந்து பிரிந்த பின்னர் நிறைய கட்டுரைகள் எழுதத் தொடங் கினார் அன்னி. சிறுவர்களுக்கான கதைகள், கட்டுரைகள் எழுதினார். அன்னியின் அரசியல் போக்கு கணவரிடம் இருந்து அவரை மேலும் பிரித்தது. பண்ணை விவசாயிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார். இறுதியாகக் கணவன், குழந்தைகளை விட்டுப் பிரிந்து லண்டனுக்குத் திரும்பினார். ஆதி காரபூர்வமாகப் பிரிவினை கிடைக்க வில்லை. இரண்டு குழந்தைகளும் பிராங்கின் பொறுப் பிலேயே இருந்தனர்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் பகுதிநேரப் படிப்பைத் தொடர்ந்தார். மூடப்பழக்க, வழக்கங்களுக்கு எதி ராகப் பரப்புரையை ஆரம்பித்தார். இதனால் மத சமூகத்தினரின் எதிர்ப்புக்கு ஆளானார்.

'நியூமால் தூசியன் அமைப்பு' என்ற சீர்திருத்தச் சங்கத்துக்குத் தலைவி யானார். நாடாளுமன்ற அங்கத்தினர் கள் கடவுளின் பெயரால் சத்தியம் செய்யத் தேவையில்லை என்று வற்புறுத்தி கூட்டங்களில் பேசினார். 'லிங்க்' என்ற பெயரில் பத்திரி கையைத் தொடங்கி, இந்தியாவிலும் அயர்லாந்திலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக எழுதினார். பெண்கள் விடுதலை, தொழிலாளர் உரிமைகள், குடும்பக் கட்டுப்பாடு போன்றபலவற்றிலும் தமது கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

The Secret Doctrine என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை பாரிசில் 1889 ஆம் ஆண்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இது அன்னி பெசண்டின் வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. தன்னுடைய நாத்திக வாதத்தைக் கைவிட்டு ஆத்திகரானார். பிளேவட்ஸ்கியின் பிரும்ம ஞான சங்கத்தில் உறுப் பினரானார். இதனை அடுத்து மார்க்சியவாதிகளுடன் தனக் கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். 1891 இல் பிளேவட்ஸ்கி இறந்ததை அடுத்து பிரும்ம ஞானத்தில் ஒரு முக்கிய புள்ளியானார். அன்னிபெசண்ட். அச்சபையின் சார்பில் 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் இடம்பெற்ற உலக கொலம்பிய கண்காட்சியில் கலந்துகொண்டார்.

1893 ஆம் ஆண்டில் பிரும்மஞான சபையின் உறுப்பி னராக முதல்முறையாக இந்தியா வந்தார். சபையின் அமெரிக்கக் கிளையின் தலைவரான வில்லியம் ஜட்ஜ் என்பவருடன் ஏற்பட்ட கருத்து மோதல்களைத் தொடர்ந்து

அமெரிக்கக்கிளை தனியாகப் பிரிந்தது. மீதமிருந்த சபை ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்பவராலும் அன்னி பெசண்டினாலும் தலைமை வகிக்கப் பட்டது.

இந்தியா வந்த அன்னி பெசண்ட், சென்னையில் அடையாறில் பிரும்ம ஞான சங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவினார். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்துப் பல நூல்களை எழுதினார். பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். காசியில் சில காலம் வசித்த அன்னி பெசண்ட் அங்கு இந்து சமய விளக்கங்களை முறைப்படி பெற்றார். இந்திய உடை தரித்து இந்துவாகவே வாழலானார்.

அன்னி இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டவராதலால், ஆங்கில அரசின் அடக்குமுறைகள் அவரை வெகுவாகப் பாதித்தன. விடுதலைப் போராட்டத்திற்கு ஆதர வாக காமன் வீல் என்ற வாரப் பத்திரிகையை 1913 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 1914 ஆம் ஆண்டில் சென்னையில் இருந்து நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். இதன் மூலம் அவர் அரசியலில் இழுக்கப்பட்டார்.

1907 ஆம் ஆண்டில் சூரத் நகரில் இடம்பெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் மிதவாதி களுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு களினால் ஏற்படவிருந்த பெரும் பிளவைத் தவிர்த்து, லக்னோவில் இடம்பெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி கண்டார். ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கத்தைத் தொடங்கினார். நாடு முழுவதிலும் அதன் கிளைகள் உருவாயின. அன்னி பெசண்ட் தமது தலைமைப் பதவிக் காலத்தில் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்தார்.

அன்னி பெசண்டின் சுற்றுப் பயணங்களுக்கும் பொதுக் கூட்டங் களுக்கும் ஆங்கிலேய அரசு தடை செய்தது. 1917, ஜூன் 15 ஆம் நாள் ஏனைய காங்கிரஸ் தலைவர் களுடன் அன்னி பெசண்டையும் கைது செய்தது. இவர்களின் கைதைக் கண்டித்து காங்கிரஸ் இயக்கம், மற்றும் முஸ்லிம் லீக் ஆகியன சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக அறிவித்தது. இதனால் நிலை குலைந்த ஆங்கில அரசு செப்டம்பரில் இவர்களை விடுதலை செய்தது.

டிசம்பர் 1917 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த மாநாட்டில் இந்திய காங்கிரசின் தலைவராக ஓராண்டிற்குத் தெரிவானார். லாகூரில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் 1929 இல் கூடிய

காங்கிரஸ் மாநாட்டில் முழுமையான சுயாட்சி கோரி அறிக்கை வெளியானது. காங்கிரஸ் சோசலிச சார்பாக கருத்துக்களை வெளியிட்டமை அன்னிபெசண்டின் கொள்கைகளுக்கு உரியதாக இருக்கவில்லை. இதனால் அவர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கங்களில் சேரவில்லை. காங்கிரசில் இருந்து விலகியிருந்தார். ஆனாலும் இந்திய விடுதலையில் முன்போலவே ஈடுபாடுகாட்டி வந்தார். இந்தியாவில் மட்டுமல்லாமல் பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது அங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவாகப் பொது மேடைகளில் உரையாற்றினார். 1929இல் ‘பொது நலவாய இந்தியா’ என்ற பெயரில் அறிக்கையை எழுதி பிரித்தானிய நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார். 81ஆவது வயதில் தீவிர அரசியலில் இருந்து விலகிய அன்னி பெசண்ட் இறுதிக் காலங்களில் இந்திய மெய்யிய லாளரான ‘ஜிட்டு’ கிருஷ்ண மூர்த்தியுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார்.

பிரும்ம ஞான சபையின் முன்னேற்றத்தில் முனைப்பாக ஈடுபட்டார். எண்பத்தேழாம் வயதில் 1937 ஆம் ஆண்டு செப்டம்பர் 20இல் சென்னை அடையாறில் அன்னிபெசண்ட் காலமானார்.

அவரது மறைவிற்குப் பின்னர், அவரது நண்பர்கள் ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆல்டஸ் ஹக்ஸ்லி, ரோசலின் ராஜகோபால் ஆகியோர் இணைந்து கலிபோர்னியாவில் ‘ஹப்பி வலி’ பாடசாலையை அமைத்தார்கள்.

இப்பாடசாலை தற்போது அன்னி பெசண்டின் நினைவாக பெசண்ட் ஹில் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அன்னி பெசண்ட் அமைத்த சென்னை அடையாறில் உள்ள பிரும்மஞான சபை இன்றும் அவர் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது.

**-ஆர். கனிமொழி,**
**முதலாண்டு நுண்ணுயிரியல்துறை**

# தூய அன்பு

“தாயின் கருவறையில்
வளரும் குழந்தையாக
அரியணையேறியிருந்தேன்.
நாட்கள் நகர்ந்தன.

தந்தையாகும் மகிழ்ச்சியில்
என் தந்தையும் பிரசவவேதனையில்
என் தாயும் மூழ்கியிருக்க நான்
பிறந்தேன் - மண்ணில் ஒரு மலராக.

வலிமறந்த தாய் என்னை நோக்க,
வலியேற்கும் நான் தாயை நோக்க
இருவருக்குமிடையில் எங்களை மீறி
வழிந்தோடியது தூய அன்பு.”

**லா. ஷபாடின்கிரேஸ் மாணிக்கம்,**
முதலாண்டு ஆங்கிலம்

வீரப்பெண்மணி

# வேலுநாச்சியார்

1730இல்ஆம் ஆண்டு, இராமநாத புரம் மன்னர் செல்ல முத்து சேதுபதி - சக்கந்தி முத்தாத்தாளுக்கு ஒரே பெண்ணாகப் பிறந்தார் வேலு நாச்சியார். எனினும், ஆண் வாரிசு போலவே வளர்க்கப்பட்டார். ஆயுதப் பயிற்சி பெற்றார். பல மொழிகள் கற்றார். 1746இல் சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதருக்கு மனைவியானார்.

1772இல் ஐரோப்பியரின் படையெ டுப்பால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்க இடம் மாறி மாறிச் சென்றார் வேலுநாச்சியார்.

இந்தப் படையெடுப்பை எதிர்க்க நினைத்த வேலுநாச்சியார் விருப் பாட்சியில் தங்கி ஹைதர் அலியைச் சந்தித்து உருது மொழியில் ஆங்கிலேயர் எதிர்ப்பு பற்றிப் பேசி விளக்கினார்.

வேலுநாச்சியாரின் உருது மொழித் திறமையைக் கண்டு வியந்த ஹைதர் அலி உதவிகள் பல செய்வதாக உறுதியளித்தார். ஏழாண்டு காலம் திண்டுக்கல் கோட்டை, விருப் பாட்சிக் கோட்டை, அய்யம் பாளையம் கோட்டை என இடம் மாறி மாறி முகாமிட்டு வாழ்ந்து வந்தார். இதற்கிடையில் தமது எட்டு வயது மகளையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. அமைச்சர் தாண்டவராய பிள்ளையின் முயற்சியினால் சிவகங்கை மக்கள் பிரதிநிதிகள் வேலு நாச்சியாரோடு கலந்து பேசி கம்பனி எதிர்ப்புப் படை ஒன்று உருவாக்கப்பட்டது. மருது சகோதரர்கள் இப்போராட் டத்துக்குத் தலைமை தாங்கினர்.

ஆண் வாரிசு இல்லாமல் உள்ள நாட்டை (அரசாங்கத்தை) தாமே எடுத்து நடத்தலாம் என்று ஆங்கிலேயர்களின் கிழக்கிந்திய கம்பெனியின் சட்டப் படி புதிய முறை (doctrine of lapse) தோற்று விக்கப்பட்டது.

அதன் பின்பு, சிவகங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் காக்கும் பொறுப்பில் இருந்த மருது சகோதர்களே ஆட்சியைக் கைப் பற்றி இருபது வருடங்கள் சிறப்பாக ஆட்சி நடத்தினர். மேலும், தங்களது இறப்பு வரையிலும் சிவகங்கையை சிறப்பான கட்டமைப்போடு ஆண்டு வந்தனர்.

1780 ஐப்பசித் திங்கள் ஐந்தாம் நாள் வேலுநாச்சியார் தலைமையில் ஒரு படை திண்டுக்கல்லிலிருந்து சிவகங்கை நோக்கிப் புறப்பட்டது. ஹைதர் அலி 5000 குதிரைப் படையுடன் வீரர்களையும் 5000 போர்வீரர் களையும், பீரங்கிப்படை

ஒன்றையும் அனுப்பி வைத்தார். படை காளையார் கோயிலைக் கைப்பற்றியது.

சிவகங்கையில் வேலுநாச்சியார், தம்மைக் காட்டிக் கொடுக்காது வெள்ளையரால் வெட்டுண்ட உடையாளுக்கு வீரக்கல் ஒன்றை நட்டு, தமது திருமாங்கல்யத்தை முதல் காணிக்கையாகச் செலுத்தி அஞ்சலி செலுத்தினார். இந்தக் கோயில் கொல்லங்குடி வெட்டையார் 'காளியம்மாள்' என்று அழைக் கப்படுகிறது.

இறுதியாகச் சிவகங்கை நகரைக் கைப்பற்ற சின்னமருது, பெரிய மருது, தலைமையில் படை திரட்டப்பட்டது. சிவகங்கை அரண் மனையில் விஜய தசமி, நவராத்திரி விழாவிற்காகக் கூடிய மக்கள் கூட்டத்தில் பெண்கள் படை மாறுவேடத்தில் புகுந்து அதில் குயிலி என்ற பெண் தன் உடம்பில் தீ வைத்து வெள்ளையரின் ஆயுதக் கிடங்கை எரித்து ஆயுதங்களை அழித்தாள். வேலுநாச்சியார், தமது ஐம்பதாவது வயதில், தமது கணவரைக் கொன்ற ஜோசப் ஸ்மித்தையும் தளபதி பான் ஜோரையும் தோற்கடித்தார்.

1793இல் வேலுநாச்சியாரின் பேத்தியின் மரணத்தால் நாச்சியா ருக்குத் துயரம் அதிகமானது. அதனால் விருப்பாட்சி அரண் மனையில் தங்கினார். பெரும் போராட்டங்களை நடத்தி நாட்டை மீட்ட வேலுநாச்சியார் டிசம்பர் 25, 1796 அன்று இறந்தார்.

-ஏ. கீர்த்தனா,
முதலாண்டு வேதியியல்துறை

## *சங்கச் சாரல் - 01*

*இப்புதிய பகுதி மாணாக்கர்கள் சங்க இலக்கியத்தின்மீது பற்றுக் கொள்வ தற்காக வெளியிடப்படுகின்றது.*

# இன்பமும் துன்பமும்

துயரங்கள் இன்றி வாழும் மனிதர்களைக் காண்பது அரிது. வாழ்க்கை என்பதே இன்பமும் துன்பமும் இணைந்த ஒன்று. இன்பம் என்ற ஒன்றைப் பற்றிக் கூறினோம் என்றால் அதற்குள் இருக்கும் துன்பங்கள் நம் கண்முன் தெரிவதில்லை. துன்பம் என்ற ஒன்றைப் பற்றிக் கூறினால் அதற்குள் மறைந்திருக்கும் இன்பங் கள் நம் கண்முன் தெரிவதில்லை.

இன்பம் என்பதும் துன்பம் என்பதும் செயலைப் பற்றியது அன்று. அது காண்போர் கண்ணைப் பற்றியது. அதனை உணர்ந்து அனுபவிக்கும் மனம் பற்றியது.

அன்பிற்கினிய துணைவன் தன் மனைவியை விட்டுச் சென்றிருக் கிறான். குறிப்பிட்ட காலத்தில் வந்துவிடுவதாகக் கூறிச்சென்றவன் காலங்கள் கடந்தும் வரவில்லை.

கணவனின் பிரிவுத் துயரில் வருந்துகின்றாள் மனைவி. இந்த நிலையில் மனைவிக்கு ஏற்படும் துன்பம் என்பது பெரியது. இத்துன்பம் தலைவன் வந்தால் இன்பமாய் மாறிவிடும். இந்நிலையில் துன்பம் என்பதைக் கடந்தால் இன்பம் என்பதும் துன்பத்தின் முடிவில்தான் இன்பம் என்பதும் துன்பம் உணரப் பட்டால்தான் இன்பம் என்பதும் உணரப்படவேண்டும். இவ்வாறு சிந்திக்கும் மனைவியே துன்பத்தைக் கடந்து வரவிற்காகக் காத்திருக்கும் தன்மை உடையவள் ஆவாள்.

தேனில் பாலைக் கலந்து வைத்தாற்போன்று சுவைமிகுந்த மாங்கனியை உண்ண வேண்டும் என வௌவால் ஆசைப்படுகின்றது. ஆனால், அந்த வௌவால் தற்பொழுது பகற்பொழுதில் ஒரு மூங்கில் காட்டில் உள்ளது. மூங்கில் காட்டினுள் நெல்லிக்காய்கள் மட்டுமே கிடைக்கின்றன. இரவுப்பொழுது வந்தால் மட்டுமே இனிய மாங்கனிகளைச் சுவைக்க முடியும். பகற்பொழுதை, அங்குக் கிடைக்கும் நெல்லிக்காய்களைத் தின்று கழிப் பதற்கு ஆயத்தமாக உள்ளது.

இங்கு வௌவால் எனும் அந்தப் பறவைக்குப் பகற்பொழுது துன்பமாக அமைவதில்லை. இரவுப்பொழுது வௌவாலுக்கு இன்பமாக அமையுமேயன்றி எல்லாப் பறவைகளுக்கும் இன்பமாவதில்லை.

இது, ஒருவருக்கு ஏற்படும் அனுபவம் மற்றவர்க்கும் அப்படித் தான் இருக்கவேண்டும் என்ப தில்லை என்ற கருத்தையும் குறிக்கின்றது.

ஒரு தலைவி தன் தலைவ னைப் பிரிந்து வாழும்போது பிறர் தலைவியர் தலைவனுடன் இணைந்து இன்பமாக வாழ்வது உண்டு என்ற சமுதாய நடை முறையைப் பற்றியதாக அமை கின்றது.

இவ்வாறு அனுபவம், முதிர்ச்சி, பண்பாடு என்பனவற்றை அறிந்து அதன்வழி நடந்து காத்திருக்கும் மனைவிக்குத் ‘தன் கணவன் வந்துவிடுவான்’ என்கின்ற சொல் எவ்வளவு இனிமையானதாக இருக் கும். அச்சொல்லை நிமித்தமாகக் கூறிய பக்கத்து வீட்டுப் பெண் ‘அமிழ்தம் உண்டு வாழ்க’ என்று வாழ்த்துகின்றாள். இதனைக் குறுந் தொகை,

***“அமிழ்தம் உண்க – நம் அயல் இலாட்டி***
***பால் கலப்பன்ன தேக்கொக்கு அருந்துபு***
***நீல மென் சிறை வள் உகிர்ப் பறவை***
***நெல்லிஅம் புளிமாந்தி, அயலது***
***முள்இல் அம்பணை மூங்கிலில் தூங்கும்***
***கழை நிவந்து ஓங்கிய சோலை***
***மழைகெழு நாடனை வரும் என்றோளே!***
***(குறுந்தொகை-201)***

என்று கூறுகின்றது.

***சாரலில் மீண்டும் நனைவோம்...***
***முனைவர் த. கண்ணன்***
தமிழ் விரிவுரையாளர்

# Helen Thayer



**Helen Thayer** is a New Zealand born explorer. At the age of 50 she became the first woman to solo to the magnetic North Pole pulling her own sled without resupply. She travelled on foot all the way with no outside help. She now lives in the United States. With her husband Bill, a retired helicopter pilot, she continues to develop educational programs for students.

Thayer is the author of *Polar Dream: The First Solo Expedition by a Woman and Her Dog to the Magnetic North Pole*, *Three Among the Wolves: A year of Friendship with Wolves in the Wild* and *Trekking the Gobi: Desert of Dreams and Despair*.

She has received the NW Explorer's Club's Vancouver Award, and the Robert Henning Award from the Alaskan Geographic Alliance for exploration and education.

She has done the following:

- Traveled alone to the magnetic North Pole accompanied only by her polar bear dog Charlie.
- Walked across the Sahara Desert following an ancient trade route of 4,000 miles
- Walked across the Mongolian Gobi Desert 1,600 miles
- In two kayak expeditions she kayaked 2,200 miles in the Amazon
- Lived alongside a wolf den for over six months and traveled the Canadian polar sea to study wild wolves for one year
- Honored by the White House and National Geographic
- Named "One of the Great Explorers of the 20th Century" by National Geographic Society and NPR
- Inducted into the Snohomish County ( Washington State) Sports Hall of Fame

- An internationally acclaimed motivational speaker
- An accomplished high altitude mountain climber
- Represented 3 countries (New Zealand, Guatemala, USA) in international track and field
- United States National luge champion

**R. Mercy**, I[st] B.Sc., Chemistry

***தகவல்***

## அமெர்த்தியாசென்னுக்கு அமெரிக்கா விருது வழங்கியது



அமெர்த்தியா சென் வங்காளம் டாக்காவில் உள்ள வாரி என்ற இடத்தத்தில் பிறந்தார். அவர் தன் மேற்படிப்பை டாக்காவில் உள்ள st Gregoly's பள்ளியில் 1941 ஆம் ஆண்டு படித்து முடித்தார். அவரது குடும்பம் 1947ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் இந்தியாவில் விஸ்வ பாரதி பல்கலைக்கழகப் பள்ளிலும் பிரெஸி டென்சி கல்லூரியிலும் படித்தார். இளநிலைப் பொருளாதாரப் பட்டத்தை முதல் வகுப்பில் தேரிப் பெற்றார். கேம்பிரிட்ஜ் ட்ரினிட்டி கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்றார். ஜெடாபுல் பல்கலைக் கழகத்தில் பொருளியல் துறைப்பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் இருந்தார். 1984ஆம் ஆண்டு சமுதாயப் பொருளாதாரத்தில் தலைமை அதிபராக இருந்தார்.

1998ஆம் ஆண்டு பொருளாதாரத் திற்கான நோபல் பரிசினைப் பெற்றால். 1999ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது பெற்றார். 2011 ஆண்டுக்கான மனிதநேய விருதினை அமெரிக்க அரசிடமிருந்து பெற்றார்.

- **எஸ். தேன்மொழி,** இரண்டாமாண்டு உயிர்த்தொழில்நுட்பவியல்துறை

## பெண்

"நீ பிறப்பதற்கு இந்தப் பூமி
எத்தனை ஆண்டுகள்தான் தவம்
கிடந்ததோ!
உன் விழி ஈர்ப்பு விசையில்தான்
இந்தப்பூமியும் சற்றுச் சாய்ந்து
சுற்றுகின்றதோ!
உன் மூச்சிக் காற்றினால்தான்
புயல்களும் இங்கு வீசுகிறதோ!
நீ கண் இமைக்கும் நேரத்தில்தான்
காலங்கள் கடந்து செல்கிறதோ!
நீ கோபத்தில் அழுவதினால்தான்
இங்கு அமிழ மழையும்
பொழிகிறதோ!
உன் பாதம் பட்டால்
யுத்தக் களங்களும் அமைதிப்
பூங்காக்களாகும்.
நீ சாதிக்கப் பிறந்தவள் - புது
சரித்திரம் படைக்கப் பிறந்தவள்."

மு. **கஸ்தூரி,** முதலாண்டு வேதியியல்

## காஞ்சனா தாமோதரன்

காஞ்சனா தாமோதரன் என்கிற காஞ்சனா கலையரசி தாமோதரன் திருநெல்வேயில் பிறந்து வளர்ந்தவர். பாளையங்கோட்டை புனித இக்னேஷியஸ் பெண்கள் பள்ளியில் படித்து, ஸாராடக்கர் மகளிர் கல்லூரியில் புகுமுக வகுப்புக் கல்வி முடித்து, சென்னை ஐ.ஐ.டியில் பொறியியல் இளங்கலைப் பட்டம் பெற்றார். 1980ஆம் வருடம் அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்து, பொறியியல் முதுகலைப் படிப்பையும், வர்த்தக மேலாண்மை பி.எச்டி.படிப்பையும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தொடர்ந்தார். பல்துறைத் தொழில் நிர்வாக அனுபமுள்ளவர்.

சமூகப்பணி, தமிழ் எழுத்து ஆகியவற்றின் வழியே தன் தாயகத்துடனான தொப்புள் கொடி உறவைப் பேணும் இந்த இந்திய-அமெரிக்கர், கணவருடனும் மகளுடனும் வாஷிங்டன் அருகே வசிக்கிறார்.

இதுவரை ஒரு சிறுகதைத் தொகுப்பையும் கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். தீவிர ஆய்வுகளுடன், தென் தமிழ்நாட்டுச் சரித்திரப் பின்புல முள்ள ஒரு நாவல் எழுதுவதில் ஈடுபட்டிருக்கிறார்.

**தமிழ்ச்செல்வி,**
இரண்டாமாண்டு உயிர்வேதியியல்துறை

மாதம் ஒரு படைப்பாளர்

## ராஜம் கிருஷ்ணன்

1925ஆம் ஆண்டு திருச்சி ராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறியில் பிறந்தவர். பள்ளிக்குச் சென்று முறையான கல்வி பயிலாதவர்.

15வயதில் கிருஷ்ணன் என்பவருக்கு மணம் செய்விக்கப்பட்டார். மின்பொறியா ளரான கணவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்து, பின்னர் கதைகளை எழுத ஆரம்பித்தார்.

1970 ஆம் ஆண்டு தூத்துக்குடி சென்று அங்குள்ள மீனவர்களின் நிலையை நேரடியாகக் கண்டு, ‘கரிப்பு மணிகள்’ என்ற நாவலை எழுதினார். பீகார் கொள்ளைக் கூட்டத் தலைவன் ‘டாகுமான்சி’யைச் சந்தித்தவர். அதன் விளைவாக ‘முள்ளும் மலர்ந்தது’ என்ற நாவலை எழுதினார். பெண் சிசுக் கொலை முதலிய பல்வேறு சமூக அவலங்களைப் பற்றி எழுதியவர்.

இவரின் 80-க்கும் மேற்பட்ட படைப்புகள் தமிழ்ப் புத்த

காலயத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவரின் 59 தொகுதிகள் அமெரிக்க காங்கிரஸ் நூலகத்தில் கிடைக்கப் பெறுகின்றன.

திரு. கிருஷ்ணனுக்குப் பக்கவாதம் வந்து நடக்க இயலாமல் ஆயிற்று. பின்னர், தன் 90ஆம் வயதில் அவர் இயற்கை எய்தினார். ராஜம் - கிருஷ்ணன் தம்பதிக்குக் குழந்தைகள் இல்லை. முதுமையில் வறுமையால் வாடிய இவர் தற்போது சென்னையில் உள்ள விஸ்ராந்தி ஆதரவற்றோர்-முதியோர் இல்லத்தில் உள்ளார்.

கடந்த தலைமுறை தமிழ் இலக்கியத்தின் முக்கியமான முகங்களுள் ஒன்றான திருமதி. கிருஷ்ணன் பல்வேறு பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றவர். அவற்றுள் சில:

*1950—நியூயார்க் ஹெரால்ட் ட்ரைப்யூன் சர்வதேச விருது*

*1953—கலைமகள் விருது*

*1973—சாகித்ய அகாதெமி விருது*

*1975—சோவியத் லாண்ட் நேரு விருது*

*1991—திரு.வி.க. விருது*

இவரின் படைப்புகளுள் சில:

*கூட்டுக் குஞ்சுகள்*
*வனதேவியின் மைந்தர்கள்*
*உத்தரகாண்டம்*
*மாறி மாறி பின்னும்*
*மலர்கள்*
*பாதையில் பதித்த அடிகள்*
*உயிர் விளையும் நிலங்கள்*
*புதியதோர் உலகம் செய்வோம்*
*பெண் விடுதலை*
*இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை*
*காலந்தோறும் பெண்மை*
*கரிப்பு மணிகள்*
*வளைக்கரம்*
*ஊசியும் உணர்வும்*
*வேருக்கு நீர்*
*பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி*
*இடிபாடுகள்*
*அலைவாய்க்கரையில்*
*சத்திய தரிசனம்*
*கூடுகள்*
*அவள்*
*முள்ளும் மலர்ந்தது*
*குறிஞ்சித்தேன்*
*சுழலில் மிதக்கும் தீபங்கள்*

தொகுப்பு:

**முனைவர் ப. சரவணன்**

தமிழ்விரிவுரையாளர்

## தமிழ்நதி

தமிழ்நதியின் இயற்பெயர் கலைவாணி. இவர், 'சூரியன் தனித்தலையும் பகல்' (2007) மற்றும் ஷஇரவுகளில் பொழியும் துயரப்பனி' (2009) ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளை வழங்கியுள்ளார். ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து கனடாவிலும் தமிழ்நாட்டிலும் மாறி மாறி வசிக்கிறார். கவிதை தவிர, பிற இலக்கிய வடிவங்களிலும் தீவிரமாக இயங்கி வருகிறார்.

**வெண்ணிலா,**

இரண்டாமாண்டு உயிர்வேதியியல்துறை

## அம்பை

அம்பை என்கிற சி.எஸ்.லக்ஷ்மி சிறந்த பெண் எழுத்தாளர்களுள் ஒருவர். 1960, பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். பெண் நிலை நோக்கினை வெளிப்படுத்தும் வகை மையிலான தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி. பல பெண் படைப் பாளிகள் தொடத் தயங்கும் விசயங்களை மிக எளிதாகத் தொட்டுச் சென்றவர். உறவு, காதல், திருமணம், அரசியல், இசை என்று பல்வேறு பரிமாணங்களைத் தொட்டவர்.பெண்களின் வாழ்க்கையை அதுவும் சுயசிந்தனை கொண்ட படித்த பெண்களை மிக இயல்பாய்ப் படைத்தவர். தமிழ கத்தின் எல்லை கடந்த நிலப் பகுதிகளையும் களனாகக் கொண்ட இவரது கதைகள் பெண்களின் உறவுச் சிக்கல்கள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள்யாவும் எள்ளல் தொனியில் கலாபூர்வமாக வெளிப்படுகின்றன.

இவர் SPARROW (Sound and Picture Archives for Research on Women) என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குநராக செயல்பட்டு வருகிறார். Dr. C. S. Lakshmi என்ற தன்னுடைய இயற்பெயரில் The Hindu, The Economics and Political Weekly, The Times of India போன்ற பத்திரிகைகளுக்கு அவ்வப்போது எழுதிவருகிறார்.

1976இல் விஷ்ணுவைத் திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்குப் பின்னர் கணவருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி குழந்தை பெற்றுக் கொள்வதில்லை என முடிவு செய்தார். பொருளாதாரக் காரணங் கள் மட்டுமின்றி படைப்பு, மற்றும் தான் தேர்ந்தெடுத்த சமூகப்

பணிகளுக்குக் குழந்தைகளை உள்ளடக்கிய குடும்ப அமைப்பு தடையாக இருக்கும் என்பது அவரது கருத்தாக இருந்தது.வரலாற்றில் எம்.ஏ. பட்டமும் அமெரிக்கன் ஸ்டடிஸில் முனைவர் பட்டமும் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், இந்தி மற்றும் கன்னடத்தில் புலமை பெற்றவர். 'தங்கராஜ் எங்கே' என்ற சிறுவர் திரைப்படத்திற்கு வசனம் எழுதியுள்ளார் . 'முதல் அத்தியாயம்' என்ற சிறுகதையைத் திரைபடமாகத் தயாரித்துள்ளார்

***வெளிவந்த நூல்கள்***

*அந்தி மாலை (நாவல்)*

*சிறகுகள் முறியும் (1976) - (முதலாவது தொகுதி - ஓர் பெண்ணின் வாழ்வில் ஏற்படும் பலவிதமான சம்பவங்களை சம்பிரதாயங்களை பேசும் கதைகள்)*

*வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை (1988), காட்டில் ஒரு மான் (2000), சக்கர நாற்காலி, ஸஞ்சாரி தண்ணியடிக்க, வற்றும் ஏரியின் மீன்கள் (2007),*

*பயணப்படாத பாதைகள் (ஓவியம், நாடகம், பாரம்பரிய நடனத் துறைகளில் ஈடுபட்ட பெண்களின் வாய்மொழி வரலாற்றுப்பதிவு)*

*சொல்லாத கதைகள்*

*ஆங்கில மொழிபெயர்ப்பில்*

*A Purple Sea (1992)*

*In a Forest*

*A Deer (2006)*

*The Face Behind the Mask of Women in Tamil literature and Society and Women Writers (1984) - (ஆராய்ச்சி நூல்)*


**பிரியதர்ஷினி,**

இரண்டாமாண்டு உயிர்வேதியியல்துறை


***<u>அறிவிப்பு</u>***

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

வருகின்ற ஜூலை மாதம் 21 ஆம்நாள் கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) யின் தமிழ்த்துறையும் திருவையாறு தமிழ் ஐயாக் கல்விக் கழகமும் இணைந்து 'அனைத்துலகக் காப்பியத் தமிழ் என்ற பொருண்மை'யில் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த உள்ளன.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பின்வரும் தொலைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். கருத்தரங்க ஒருங்கி ணைப்பாளர்கள் :

***முனைவர் மா. கார்த்திகேயன்***
9894953535

***முனைவர் மு. கலைவேந்தன்***
9486742503

# கங்கைகொண்ட சோழபுரம்

கங்கைகொண்ட சோழபுரம் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத் திலுள்ள அரியலூர்க்கு அருகில் உள்ள கிராமம் ஆகும். பதினொன்றாம் நூற்றாண்டின் நடுவில் இதனை முதலாம் ராஜேந்திர சோழன் தனது தலைநகரமாக ஆக்கினார். இது பதிமூன்றாம் நூற்றாண்டு வரை சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. அங்கு ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட பிரம்மா ண்டமான சிவன் கோவில் ஒன்றும் உள்ளது.

தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடிக்கப்பட்டு இருபது ஆண்டுகளில் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம் கோயில் தஞ்சைக் கோயில் பிரதானமான அல்லது மிக முக்கியமான இயல்புகளை ஆனால் அந்த இயல்புகளை வேறு ஒரு வகை உணர்ச்சியுடன் வெளிப் படுத்துகிறது. தஞ்சைப் பெரிய கோயிலில் ஆண்மையின் மிடுக்கும் வீரமும் பொங்கி வழிகிறது என்றால், கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் பெண்மையின் மென் மையும் அழகும் உள்ளத்தைக் கவருகின்றன. தஞ்சைக் கோயில் வீரத் தன்மைகளும், ஆண்களுக் குரிய கம்பீரமும் கங்கை கொண்டை சோழபுரத்தில் இல்லை, ஆனால் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு என்று தனித்த சில கவர்ச்சிகள் உள்ளன.

ஒரு பெண்ணின் அழகு, எவ்வாறு அவளைப் பார்ப்பவர் உள்ளங்களைச் சுண்டி இழுக் கிறதோ அத்தகையது கங்கை கொண்ட சோழீச்சுவரம். வளைவு களில் காணப்படும் இந்த வேறுபாட்டுக்கு ஒரு காரணம், விமானத்தின் அமைப்பில் நேர் கோடுகளுக்குப் பதிலாக நெளிவுகள் கையாளப்பட்டிருப்பது தான். பொதுவாக தஞ்சாவூரைவிட இங்குப் பொலிவுபடுத்துவதில் அக்கறை காட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. ஒரு காலத்தில் இது கோயில் களாகவும் விளங்கியது. அதே நேரத்தில் வல்லமை பொருந்திய பெரிய கோட்டையாகவும் சிறந்தி ருந்தது. கோயிலில் தென் மேற்கு மூலையில் பெரியதொரு அரண் இருக்கிறது. மேற்கே சிறு அரண் இருக்கிறது. 340 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்டுள்ள

இக்கோயிலில் 175 அடியும் 95 அடியும் நீள அகலங்கள் உடைய மண்டபமும் ஒவ்வொரு பக்கத்திலும் 100 அடி உடைய சதுரமான கர்ப்பக்கிரகமும் உள்ளன. மண்டபத் தையும் கர்ப்பக் கிரகத்தையும் இணைக்க ஓர் இடைவழி இருக்கிறது. தஞ்சாவூரில் இருப்பதைப் போல, இங்கேயும் இந்த இடைவெளியின் மூலைகளில் வடக்கு, தெற்கு வாயில்கள் அழகான வேலைப் பாடுள்ள கதவுகளுடன், கண்ணையும் கருத்தையும் கவரும் துவார பாலகர்களுடன், படிக்கட்டுகளுடன் மிளிர்கின்றன.

மெய் சிலிர்க்கக்கூடிய வகையில் கட்டடக் கலையையும் சிற்பக் கலையையும் பிரம்மாண்டமான உரு வத்தில் வடித்து, கவர்ச்சியான பெரியதொரு கோட்டை வாயில்போல், மண்டபத்தின் கிழக்கு மூலையில் பிரதான வாயில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அந்தப் பெரிய மண்டபத்தில் 140 தூண்களும், 4 அடி உயரமுள்ள மேடை மீது, அகலப்பட எட்டு வரிசைகளில் நிறுத்தப் பட்டிருக்கின்றன.

மண்டபத்தின் நடுவே, தரை மட்டத்தில் ஓர் அகன்ற பாதை போடப் பட்டிருக்கிறது. அது, தொடர்ந்து, மண்டபம் முழுவதும் உள்ள உட்சுவரைச் சுற்றி ஒரு குறுகலான பாதை வழியாகச் செல்லுகிறது. அதன் மீது 18 அடி உயரமுள்ள தட்டையான கூரை, எல்லா பக்கங்களிலும் 16 அடி அகலத்திற்குப் பரவியிருக்கிறது.

மற்றொரு கோடியில் இறங்கி ஏறாமல் செய்யக்கூடிய இடைவெளி இருப்பது இந்த மண்டப அமைப்பில் முக்கியமாகக் கவனிக் கத்தக்கது. அதன் மேல்பகுதி, மண்டபத்தின் மேலே கூரை எழுப்பி, அதற்கும் விமனத்திற்கும் இடையே இரண்டு அடுக்குக் கட்டிடம் போலத் தெரிகிறது. இடைவெளிக்குள் இரண்டு வரிசைகளில் சதுரமான பெரிய (மேடை தாங்கித்) தூண்கள், வரிசைக்கு நான்காக, உள்ளன, இந்தத் தூண்கள் சம இடை வெளிகளில் நிறுத்தப் பட்டிருப் பதால் மண்டபத்திற்கு மேலும் அழகு ஊட்டுகின்றன. இவற்றுக்குப் பின்னால் கர்ப்பக்கிரகம் கம்பீரமாகத் திகழ்கிறது.

விமானத்தின் உயரம் 160 அடி. எனவே, இது தஞ்சாவூர்க் கோயில் அளவு உயரமாக இல்லை. ஆனால் இங்கும்,

விமானம் அந்தக் கோயில் முழுவதையும் கவரும்படியும் வழியில் செல்பவர் அனைவர் மனத்திலும் பதியும்படியும் அமைந்திருக்கிறது இங்குப் பல சிறுகோயில்கள் இருந்தன என்பது அண்மையில் நடந்த அகழ்வாராய்ச்சியால் தெரிய வந்தது. இந்த உட்கோயில்கள் இன்னும் ஆராயப்படவேண்டிய நிலையிலேயே உள்ளன.

விமானத்தின் அடித்தளம், கர்ப்பக்கிரகத்தின் செங்குத்தான சுவர்கள், இவற்றின் உயரம் 35 அடி. தஞ்சாவூரைப் போல, இங்கும், இந்தச் சுவர்கள் மிகப்பெரிய பிதுக்கத்தால் இரண்டு மாடிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. கிழக்குப் பக்கத்தில் மட்டுமே கதவுகள் உள்ளன. விமானத்தில் எட்டு நிலைகளே உள்ளன. தஞ்சாவூரில் இருப்பது போல 13 நிலைகள் இல்லை. கட்டிடத்தின் இந்தப் பகுதியில்தான் உள்ளத்தைக் கவரும் அழகுமிகு வளைவுகள் உள்ளன. இவை கட்டட அமைப்பு முறையில் உண்டான மாறுதல் களைச் சுட்டுகின்றன.

இது கட்டடக் கலையின் புதிய சாதனை எனலாம். கோபுரத்தின் கோணங்களில் உட்குழிவான வரைவுகளிலும் அதன் பக்கங்களிலும் உள்ளே வைத்து மூடப்பட்ட வடிவு விளிம்பு களிலும் நெளிவுக் கோடுகள் போடப்பட்டிருப்பதைக் காணலாம். இவைதான், கங்கை கொண்ட சோழபுர கோயிலுக்குப் பெண்ணிபை ஊட்டுவன. உச்சிப் பகுதியில் இப்படி அழகுபடுத்தப் பட்டிருப்பது, பெண்கள் சீவிச் சிங்காரிப்பது போன்றது. கூடுகளின் நான்கு 'சைத்தி யங்கள்' பறவைகளின் இறகுகள் போல உள்ளன.

"ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது முற்றிலும் பருவம் அடைந்த பெண்ணின் அழகை சோழர்களின் இந்த அரிய படைப்பில் நுகருகிறோம்" என்று பெர்சின் பிரவுன் கருத்துத் தெரிவித்துள்ளார். தஞ்சாவூரைப் போல, இங்கும் மூலஸ் தானத்துக்கு அதே நிலையிலும் சம்மந்தத்திலும், சண்டிகேஸ்வரர் சந்நிதி இருக்கிறது.

இது தவிர, அம்மனுக்கு ஒரு தனிக்கோயில் கட்டப்பட்டிருப்பது கவனத்திற்கு உரியது. இறைவ னுடைய கோயிலைவிட அம்மன் கோயில்தான் தஞ்சாவூரைப் பின்பற்றிக் கட்டப்பட்டிருப்பதாகச் சொல்லலாம். மேலும், கங்கை

கொண்ட சோழபுரத்தில் இறைவன் கோயில், அம்மன் கோயில் இரண்டுமே ஒரே காலத்தில் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கங்கை கொண்ட சோழபுரத்தில் இறைவன் கோயிலுடன் சேர்ந்து அதே காலத்திலோ அல்லது அதைத் தொடர்ந்து அதற்கு அடுத்தாற் போலோ அம்மன் கோயில் உண்டாயிற்று.


சோழர் கலையின் இறுதிக் காலத்திற்கு முன்னான, சில பொதுவான வளர்ச்சிகளுள் முக்கியமாக அம்மனுக்குத் தனிக் கோயில் கட்டப்பட்டதைக் காணலாம். தேவியை, தமிழில் அம்மன் என்று சொல்வார்கள். மூலத்தானத்து தெய்வத்தின் மனைவியாக, தேவியை (அம்மனை) அந்தக் கோயிலிலேயே வழிபடுவது மரபு. ஆனால், அவளுக்கென்று தனிக் கோயில் கட்டுவது என்ற பழக்கம் முதல் தடவையாக முதலாம் இராஜராஜன் காலத்தில் ஏற்பட்டது. அப்போது 'திருகாமக் கோட்டம்' என்ற பெயர் அம்மன் சன்னதிக்கு வழங்கு வதாயிற்று. ஆனால், தஞ்சாவூரில் பெரியநாயகிக்கு உரிய கோயில் 13ஆம் நூற்றாண்டில்தான் கட்டப் பட்டது. தஞ்சை மாவட்டம், கண்டியூர் சிவன் கோயிலில் மங்களாம்பிகை சந்நிதியின் கிழக்குச் சுவரில் முதலாம் இராஜராஜன் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதில், அவன் காலத்திய மற்றொரு அம்மன் கோயில் குறிப்பிடப்படுகிறது. ஆனால், அக்கல்வெட்டில் சில குறைபாடுகள் இருப்பதால் அதை முக்கியமானதாகக் கொள்வதற் கில்லை. முதலாம் இராஜராஜன் காலத் தில் 16ஆம் ஆட்சி ஆண்டில் எண்ணாயிரத்தில் (தென் ஆற்காடு மாவட்டம்) ஏற்பட்ட கல்வெட்டு, உட்கோயில்களின் பட்டியலில் துர்க்கை கோயில் தவிர, ஸ்ரீபட்டாரகியர் (பிடாரியார்) என்று அதைக் குறிப்பிட்டிருப்பது தனித்த அம்மன் கோவிலைப் பற்றியே இருக்கக் கூடும்.

*மாபெரும் வீரனாகத் திகழ்ந்த இராசேந்திரன் வடக்கே படையெடுத்துச் சென்று கங்கை நீரைக் கொண்டு வந்து தமது சோழ நாட்டைத் தூய்மைப்படுத்த விரும்பினார். இவரது வடநாட்டுப் படையெடுப்பு வேங்கிக்கு வடக்கே இருந்து தொடங்கியது. அங்கிருந்து கலிங்கம், ஒட்டவிசயம் என்னும் நாடுகளின் வழியாகச் சென்ற சோழப்படை வங்காள நாட்டைத் தாக்கியது. கங்கை செல்லும் வழியில் பல வடநாட்டு மன்னர்களோடும் போர் செய்து வெற்றி கண்டது. பின்பு கங்கையாற்று நீரை வடநாட்டு மன்னர்களின் தலையில் சுமக்கச் செய்து சோழநாடு திரும்பியது. இராசேந்திரன் கங்கையில் இருந்து கொண்டுவந்த நீரைத் தாம் புதிதாக உருவாக்கியிருந்த தலை நகரத்தில் வெட்டுவித்த ஏரியில் நிரப்பி, அந்த ஏரிக்குச் சோழகங்கம் என்ற பெயரைச் சூட்டி வெற்றிவிழா நடத்தினார். தமக்குக் கங்கை கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரையும் சூடிக்கொண்டார். புதிய தலைநகரத்துக்குக் கங்கை கொண்ட சோழபுரம் எனப் பெயர் இட்டார். அந்நகரில், தம் தந்தை தஞ்சையில் கட்டிய பிரகதீசுவரர் கோயில் போன்ற அமைப்புடைய ஒரு கோயிலைக் கட்டினார்.*



பிற்கால ஆட்சிகளில் சோழ பேரரசின் பகுதிகளிலும் அம்மனுக்குத் தனி கோயில்கள் இருந்ததற்கும் புதுப்பித்து கட்டப்பட்டதற்கும் தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன. மூன்றாம் குலோத்துங்கன் அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன் ஆகியோர் கல்வெட்டுக்களின் ஆதாரங்களைக் கொண்டு அவருடைய ஆட்சிக் காலங்களில் ஏற்கனவே இருந்த கோயில்களுக்குத் திருக்காமக் கோட்டங்கள் சேர்க்கப்பட்டன அல்லது புதிய கோயில்களில் திருக்காமக் கோட்டங்கள் பெரும் பணச் செலவில் அழகுபட நிர்மாணிக்கப்பட்டன.

அது அந்தக் காலத்திய நடைமுறை வழக்கமாக இருந்தது என்று உறுதியாகத் தெரிகிறது. திருபுவனத்தில் மூன்றாம் குலோத்துங்கனின் சம்ஸ்கிருதக் கல்வெட்டு இருக்கிறது சிதம்பர நடராஜர் கோயில் தொகுதியிலுள்ள சிவகாம சுந்தரி கோயிலை அவன் அழகுபடச் செய்து புதிதாக தங்கத்தில் ‘சுற்றாலை வளைவும்’ செய்து வைத்ததாகவும் அவரே அக் கல்வெட்டில் தெரிவித்துள்ளார்.




Rajendra Chola I
முதலாம் ராஜேந்திர சோழன்

Rajendra Chola's Territories c. 1030 CE
ராஜேந்திர சோழரின் பிரதேசங்கள் c. 1030 CE

மேலும், கங்கைகொண்ட சோழேஸ் வரம் என்ற சிவன் கோவிலையும் கட்டினார். இவனுக்குப் பிறகு வந்த சோழர்கள் இந்நகரத் தையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர்.

கங்கை வரை பெற்ற வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழப் பேரேரி அமைக்கப்பட்டது. இதற்கு சோழகங்கம் என்றும் பெயர் உண்டு.

நன்றி : http://ta.wikipedia.org

***மாணாக்கர்களுக்கு வரலாற்றை அறிவிக்கும்பொருட்டு இக்கட்டுரை தமிழ்த்துறை சார்பாக வெளியிடப்படுகின்றது.***

## *கடிதங்கள்*



*எழுத்தாளர்*

**திரு. அ. முத்துலிங்கம்**

கனடா

'விடியல்' போன்ற ஓர் அருமையான பத்திரிகையைத் தங்கள் மாணவர்கள் நடத்துவது பெரும் மகிழ்ச்சிக்குரிய விசயம். வாழ்த்துக்கள்.

எல்லாக் கவிதைகளுமே எனக்குப் பிடித்தன. கட்டுரைகள் பற்றிச் சொல்லவே தேவையில்லை. எத்தனை பெரிய இலக்கிய ஆளுமை. அவரை ஏற்கனவே மறக்கத் தொடங்கிவிட்டார்கள். இக்கட்டுரை நல்ல நேரத்தில் வந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து ஜி.நாகராஜன் கட்டுரையும் மிகத் தேவையான ஒன்று. தாளாளர் பற்றிய கவிதையும் குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானத்தில் எனக்கு ஆர்வம் உண்டு. எனவே, கலீலியோ பற்றிய கட்டுரையைப் படித்தேன். இன்னும் கொஞ்சம் அதிக தகவல்களைக் கொடுத்திருக்கலாம். நிறைய தகவல்கள் இணையத்தில் இருக்கின்றன.

முகைதீன் கப்பல் மணி ஏற்கனவே படித்தது. என்னை இரண்டுதரம் படிக்க வைத்தது சரித்திரம் தலைப்பில் எழுதிய கட்டுரை. அதில் சிலப்பதி காரம், பட்டினப்பாலை ஐங்குறுநூறு, அகம் என நிறைய விசயங்களை அறிய முடிந்தது.

'விடியல்' மிகவும் அருமையான முயற்சி. என் பாராட்டுகள்."



எழுத்தாளர்&இதழியலாளர்

**திரு. மாலன், நிறுவனர், புதிய தலைமுறை வாரஇதழ்&தொலைக்காட்சி,**

சென்னை.

"மாணவர்கள் இதழ் நடத்துவதும் அதை நிர்வாகம் ஊக்குவிப்பதும் பாராட்டிற்குரிய செயல்."

விடியல் இதழின் அடுத்துவரும் சில இதழ்களைக் கவிதைச் சிறப்பிதழ், சிறுகதைச் சிறப்பிதழ், இசைச் சிறப்பிதழ், அறிவியல் சிறப்பிதழ் போன்ற சிறப்பிதழ்களாக வெளியிடும் திட்டம் உள்ளது. அவை தொடர்பான படைப்பு களை வழங்குமாறு மாணாக்கர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தனிச்சுற்றுக்கு மட்டும்

